Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Tamilnadu Association For The Rights of All Types of Differently Abled and Caregivers - TARATDAC
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய், டிசம்பர் 17, 2024 | இதழ் 248

# எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு; 2 முறை வாக்கெடுப்பு ‘ஒரே நாடு ஒரே தேர்தல்‘ மசோதா: பாராளுமன்றத்தில் தாக்கல் நாடாளுமன்ற கூட்டு குழுவுக்கு அனுப்ப பரிந்துரை

சென்னை, 17 டிசம்பர் 2024: ‘ஒரே நாடு ஒரே தேர்தல்' மசோதாவை பாராளுமன்றத்தில் இன்று மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வால் அறிமுகம் செய்த போது எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன.

மேலும் இந்த மசோதாவை நாடாளுமன்ற கூட்டு குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தன. இதனை அடுத்து 2 முறை மின்னணு வாக்கெடுப்பு நடந்தது. மசோதாவுக்கு ஆதரவாக அதிக உறுப்பினர்கள் ஓட்டு அளித்ததால் மசோதா அறிமுகம் செய்யப்பட்டது.

பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டசபைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த, பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இது குறித்து ஆராய்ந்து, மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக, முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையில் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது.

அந்தக் குழுவினர் அனைத்து கட்சிகள், சமூக அமைப்புகள் உட்பட பல்வேறு தரப்பினருடன் ஆலோசனை நடத்தினர். கடந்த மார்ச் மாதம் இந்தக் குழு தனது அறிக்கையை, ஜனாதிபதி திரவுபதி முர்முவிடம் அளித்தது. ஒரே நேரத்தில் தேர்தல் சாத்தியம் என்றும், துவக்கத்தில் அதை பல கட்டங்களாக செயல்படுத்தலாம் என்றும் அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

மேலும், இதற்காக பல சட்ட திருத்தங்கள் செய்ய வேண்டும் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. 3 சட்டப் பிரிவுகளில் திருத்தம், 12 புதிய சட்டப் பிரிவுகள் சேர்ப்பு மற்றும் யூனியன் பிரதேசங்களான டெல்லி, ஜம்மு - காஷ்மீர், புதுச்சேரி ஆகியவற்றுக்கான சட்டங்களில் திருத்தம் என, மொத்தம் 18 சட்ட திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று கூறியிருந்தது. இந்த அறிக்கையை மத்திய அமைச்சரவை ஏற்றுக்கொண்டது. அதன் அடிப்படையில் மசோதா தயாரிக்கப்பட்டது. மசோதாவுக்கு, கடந்த 12ம் தேதி மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இந்நிலையில், இன்று பாராளுமன்றத்தில் ‘ஒரே நாடு ஒரே தேர்தல்' 



மசோதாவை மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வால் தாக்கல் செய்தார். அப்போது எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனை அடுத்து மசோதா மீது விவாதம் நடைபெற்றது.

ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்துக்கு காங்கிரஸ், சமாஜ்வாதி, திரிணாமுல், திமுக உள்ளிட்ட கட்சிகள் பாராளுமன்றத்தில் கடும் எதிர்ப்பு தெரிவித்து பேசின.

காங்கிரஸ் எம்பி மணீஷ் திவாரி பேசியதாவது:

“ஏழாவது அட்டவணையை கடந்து அடிப்படை கோட்பாடுகள் உள்ளன. ஒரு சில அரசியல் கோட்பாடுகள் அவையில் திருத்தங்களுக்கு மீறியதாக உள்ளது. நமது இறையாண்மை மற்றும் ஜனநாயகக் கட்டமைப்பு என்பது மாற்றப்படக் கூடாது.

சட்டத்துறை அமைச்சர் கொண்டு வந்துள்ள மசோதாக்கள் சட்டம் இயற்றும் ஆற்றலுக்கு மீறியதாகும். நமது அரசியல் சாசனத்தில் மாநில காலகட்டத்தை எப்படி தேசிய அரசியலுக்கு ஏற்றவாறு மாற்ற முடியும். இது அரசியல் சாசனத்தின் அடிப்படைக்கு எதிரானது.

இந்திய அரசியல் சாசனத்தில் மாநிலங்களின் சரிசமமான அதிகாரத்தை கொண்டுள்ளது. தேசிய அரசியலுடன் கொண்டு வர முடியாது. இந்தியா என்பது மாநிலங்களின் கூட்டமைப்பாகும். ஆகையால், மத்திய அதிகாரம் என்பது அரசியல் சாசனத்துக்கு முற்றிலும் எதிரானது. வெளிப்படைத்தன்மைக்கு எதிரானது. இந்த அவையின் அதிகாரத்துக்கு மீறிய சட்டத்தை விலக்கிக் கொள்ள வேண்டும்” எனத் தெரிவித்தார்.

சமாஜ்வாதி கட்சியைச் சேர்ந்த எம்.பி. தர்மேந்திரா யாதவ் பேசுகையில், “ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா அரசியலமைப்பு அடிப்படை கட்டமைப்புக்கு எதிரானது. இந்தியாவின் பன்முகத் தன்மையைச் சீர்குலைக்கச் சதி நடக்கிறது” எனப் பேசினார்.

திரிணாமுல் காங்கிரஸ் எம்பி கல்யாண் பானர்ஜி பேசுகையில், “ஒரே நாடு; ஒரே தேர்தல் மசோதா அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பை பாதிக்கிறது. சட்டப்பிரிவு 82 மற்றும் துணைப்பிரிவு 5 அனைத்து அதிகாரத்தையும் தேர்தல் ஆணையத்துக்கு வழங்குகிறது. உலகம் அழியும் வரை ஒரே கட்சியால் ஆட்சி அமைக்க முடியாது" என கூறி மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்தார்.

சிவசேனா எம்.பி. அனில் தேசாய் உள்ளிட்டோரும் இந்த மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

மேலும் இது தொடர்பாக திமுக எம்.பி. டி.ஆர். பாலு பேசுகையில், “ஒரே நேரத்தில் நாடு முழுவதும் தேர்தல் நடத்துவது சாத்தியமற்றது. ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாவை நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணைக்கு அனுப்ப வேண்டும்” என வலியுறுத்தினார்.

அரசியல் சாசன திருத்தம் குறித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியது போல், ஜனநாயகத்தை அழிப்பது போன்று உள்ளது. அரசுக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லாதபோது எப்படி மசோதாவை நிறைவேற்றுவீர்கள்.

வாக்காளர்கள் வாக்களித்து 5 ஆண்டுகளுக்கு ஆட்சி செய்ய முடியும். இந்த உரிமையை பறிக்க முடியாது. அனைத்து அரசியல் கட்சிகளின் கருத்து ஒற்றுமை என்பது கடினமாக இருக்கும் என்பதால் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது சாத்தியமற்றது என்று 2015-ல் தாக்கல் செய்யப்பட்ட 9வது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை நிலைக்குழுவின் விசாரணைக்கு கொண்டு செல்லப்பட்டு பரிசீலனை செய்ய வேண்டும். அதன்பிறகு விவாதத்துக்கு அவைக்கு கொண்டு வரவேண்டும்” எனத் தெரிவித்தார்.

தெலுங்கு தேசம் கட்சி இந்த மசோதாவுக்கு தனது அசைக்க முடியாத ஆதரவை வழங்கியது, இது நாடு முழுவதும் தேர்தல் செயல்முறையை சீராக்கும் என்று கூறியது.

இதற்கிடையில், ஏஐஎம்ஐஎம் எம்பி அசாதுதீன் ஒவைசி, இந்த மசோதா நாட்டில் உள்ள அனைத்து பிராந்திய கட்சிகளையும் ஒரே அடியாக முடிவுக்குக் கொண்டுவரும் என்றும், இது "உச்ச தலைவரின் ஈகோவை திருப்திப்படுத்த" மட்டுமே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்றும் பேசினார்.

விவாதத்தை அடுத்து ஒரே நாடு ஒரே தேர்தல் தொடர்பாக மக்களவையில் 2 முறை மின்னணு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 2வது முறை நடந்த வாக்கெடுப்பில் மசோதாவுக்கு ஆதரவாக 269 பேரும், எதிராக 198 பேரும் மின்னணு முறையில் வாக்களித்தனர். அதிக உறுப்பினர்கள் மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்ததால் இந்த மசோதா அவையில் அறிமுகம் செய்யப்பட்டது.

# வருமானவரித்துறை அதிகாரிகள் போல் நடித்து ரூ.20 லட்சம் கொள்ளை

சென்னை, 17 டிசம்பர் 2024: சிடி ஸ்கேன் கருவி வாங்க சென்றவரிடம் வருமானவரித்துறை அதிகாரிகள் போல் நடித்து 20 லட்ச ரூபாயை கொள்ளை அடித்த கும்பலை போலீசார் தேடி வருகிறார்கள்.

சென்னை பழைய வண்ணாரப்பேட்டை நடராஜன் தெருவில் வசிப்பவர் முகமது கவுஸ். இவர் வாணியம்பாடி பகுதியைச் சேர்ந்த ஜுனைத் அகமது என்பவரிடம் வேலை செய்து வருகிறார். கடந்த 15 ந்தேதி முகமது கவுஸை அழைத்து புதிய சிடி ஸ்கேன் கருவி வாங்க வேண்டும் என்று கூறி 20 லட்ச ரூபாயை ஜுனைத் அகமது கொடுத்துள்ளார்.

அந்த பணத்துடன் முகமது கவுஸ் சென்னைக்கு வந்தார். இந்த நிலையில் நேற்று அவருக்கு போன் செய்த ஜுனைத் அகமது, திருவல்லிக்கேணி பகுதியில் வசித்து வரும் ஹரீஷ் என்பவர் 10 லட்ச ரூபாய் தரவேண்டி உள்ளது. அவரிடம் சென்று வாங்கி கொள் என்று தெரிவித்துள்ளார்.

இதையடுத்து பணத்தை வாங்குவதற்காக முகமது கவுஸ் பைக்கில் ஏற்கனவே வைத்திருந்த 20 லட்ச ரூபாய் பணத்துடன் சென்றார். அப்போது அவர் ஓமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனை பஸ் நிலையம் அருகே வந்த போது திடீரென போலீஸ் சீருடையில் பைக்கில் வந்த ஒருவர் தான் உதவி ஆய்வாளர் என்று கூறி, பைக்கை சோதனை செய்த போது அதில் பணம் இருந்ததைப் பார்த்து, அவர் போன் செய்து 3 பேரை அழைத்துள்ளார்.

அப்போது காரில் வந்த 3 பேர் தாங்கள் வருமானவரித்துறை அதிகாரிகள் என்றும், வருமானவரித்துறை அலுவலகத்திற்கு செல்ல வேண்டும் என கூறி அவர்கள் முகமது கவுஸை காரில் ஏற்றிச் சென்றனர்.

பிறகு சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை அருகே சென்ற போது கத்தியை காட்டி மிரட்டி பணத்தை பறித்துக் கொண்டு இறக்கி விட்டனர். இதையடுத்து நடந்த சம்பவத்தை ஜுனைத் அகமதுவிடம் முகமது கவுஸ் தெரிவித்தார். இதன் பிறகு முகமது கவுஸ் சம்பவம் குறித்து திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.




# அமெரிக்க பள்ளியில் மாணவன் துப்பாக்கிச் சூடு: 3 பேர் பலி

சென்னை, 17 டிசம்பர் 2024: அமெரிக்காவின் விஸ்கான்ஸ் மாகாணத்தில் பள்ளியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழந்தனர். 9 பேர் பலத்த காயமுற்றனர். இந்தச் சம்பவத்துக்கு அதிபர் ஜோ பிடன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

விஸ்கான்சின் மாகாணம் மேடிசன் நகரில் உள்ள பள்ளி ஒன்றில் நுழைந்த சிறுவன் ஒருவன் சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினான். இதில் ஆசிரியர் ஒருவரும், சிறுவனின் சக மாணவர் ஒருவரும் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்தனர். துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட நபரும் சடலமாக மீட்கப்பட்டான்.

சம்பவம் நடந்த பள்ளியில் 400 குழந்தைகள் படிக்கின்றனர். அப்பள்ளியில் மழலையர் வகுப்பு முதல் மேல்நிலை வகுப்புகள் வரை உள்ளன. இந்நிலையில் அங்கு சிறுவன் ஒருவன் நடத்திய துப்பாக்கிச் சூடு சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து மேடிசன் நகர காவல்துறை தலைவர் ஷான் பார்னஸ் கூறுகையில், “இந்தச் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டனர். சந்தேகப்படும் சிறுவனும் இறந்துவிட்டான். 2 பேர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்” என்றார்.

அமெரிக்க அதிபர் ஜோ பிடன் இந்தத் துப்பாக்கிச் சூடு சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “நியூடவுன் முதல் உவால்டே வரை, பார்க்லேண்ட் முதல் மேடிசன் வரை நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் போதிய கவனம் பெறவில்லை. நாம் நமது குழந்தைகளை துப்பாக்கிக் கலாச்சாரத்திலிருந்து காக்க வேண்டும். வகுப்பறையில் பாதுகாப்பாக உணர்வது குழந்தைகளின் உரிமை. நம் குழந்தைகள் பள்ளிகளில் வாசிப்பையும், எழுதுவதையும் கற்றுக் கொள்ள வேண்டுமே தவிர எப்படி துப்பாக்கிச் சூட்டிலிருந்து தற்காத்துக் கொள்வது என்றல்ல. குழந்தைகளை மனரீதியாக முடக்கும், பெற்றோர்களை அச்சத்தில் ஆழ்த்தும், சமூகத்தில் பிளவை ஏற்படுத்தும் இத்தகைய வன்முறைகளை அனுமதிக்க முடியாது” என்று தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# இருக்கை நுனியில் அமரவைகும் சைக்கோ த்ரில்லர் படம் 'இரவின் விழிகள்'

சென்னை, 17 டிசம்பர் 2024: மகேந்திரா ஃபிலிம் ஃபேக்டரி சார்பில் மகேந்திரா தயாரிப்பில் உருவாகும் படம் 'இரவின் விழிகள்'. இரவின் விழிகள் என்ற இப்படத்தை இயக்குநர் சிக்கல் ராஜேஷ் இயக்குகிறார். மகேந்திரா கதையின் நாயகனாக நடிக்க, வில்லன் கதாபாத்திரத்தில் இயக்குநர் சிக்கல் ராஜேஷ் நடிக்கிறார். கதாநாயகியாக நீமா ரே நடித்திருக்கிறார். இவர் கன்னடத்தில் வெளியான பங்காரா என்கிற படத்தில் நடித்ததற்காக சிறந்த நடிகைக்கான தேசிய விருது பெற்றவர். மேலும் முக்கிய வேடங்களில் நிழல்கள் ரவி, மஸ்காரா அஸ்மிதா, கும்தாஜ், சேரன் ராஜ், சிசர் மனோகர், ஈஸ்வர் சந்திரபாபு, கிளி இராமச்சந்திரன் மற்றும் பலர் நடித்துள்ளனர்.



இந்தப் படம் சைக்கோ திரில்லர் ஜானரில் உருவாகியுள்ளது. ஒருவன் சைக்கோ ஆவதற்கு அவனுக்கென தனிப்பட்ட சொந்த ஒரு காரணம் இருக்கும். இங்கே அப்படி ஒருவன் சைக்கோ ஆவதற்கு இந்த சமுதாயத்தின் மீதான ஒரு கோபமும் ஒரு பொது விஷயமும் காரணமாக இருக்கிறது. அது என்ன என்கிற வித்தியாசமான கதை அம்சத்துடன் இருக்கை நுனியில் அமர வைக்கும் விதமாக 'இரவின் விழிகள்' படம் தயாராகி வருகிறது இந்த படத்திற்கு ஏஎம் அசார் இசையமைத்துள்ளார். பாஸ்கர் ஒளிப்பதிவை கவனிக்க விடுதலை படத்தின் படத்தொகுப்பாளர் ஆர் ராமர் படத்தொகுப்பை மேற்கொண்டுள்ளார். படத்தில் இரண்டு சண்டைக் காட்சிகள் மற்றும் நான்கு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. சண்டைப் பயிற்சியை சரவெடி சரவணன் மற்றும் சூப்பர்குட் ஜீவா ஆகியோரும், நடனத்தை எல்கே ஆண்டனியும் வடிவமைத்துள்ளனர். இரவின் விழிகள் படத்தின் படப்பிடிப்பு பெரும்பாலான படப்பிடிப்பு ஏற்காடு அருகில் உள்ள வெள்ளிமலை பகுதியில் நடைபெற்றுள்ளது. மேலும் பாண்டிச்சேரி, மரக்காணம் அதை சுற்றி உள்ள பகுதிகள் மற்றும் திருப்பூரிலும் இதன் படப்பிடிப்பு கிட்டத்தட்ட 50 நாட்கள் நடைபெற்றுள்ளது. தற்போது போஸ்ட் புரடக்சன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

# "மக்களுக்கு பயந்து நாம் படம் எடுக்க வேண்டும்" ; 'சதுரங்க ஆட்டம் ஆரம்பம்' பட துவக்க விழாவில் இயக்குநர் பேரரசு பேச்சு

சென்னை, 17 டிசம்பர் 2024: விவிஎஸ் சுப்ரீம் பிலிம்ஸ் சார்பில் வினோத் வி சர்மா தயாரிப்பில் உருவாகும் படம் 'சதுரங்க ஆட்டம் ஆரம்பம்'. எம் வி ராமச்சந்திரன் இயக்குனராக அறிமுகமாகும் இந்தப்படத்தில் நடிகர் அஜய் கதாநாயகனாக நடிக்கிறார். இவர் மரகதக்காடு படத்தில் நடித்தவர். மேலும் கலர்ஸ் டிவியில் ஒளிபரப்பான மெகா ஹிட் ஆன ஜமீலா மற்றும் ஜீ தமிழில் ஒளிபரப்பாகும் நள தமயந்தி தொடர்களிலும் நடித்தவர். கதாநாயகியாக சோனியா நடிக்க முக்கிய வேடத்தில் முருகா அசோக் குமார் நடிக்கிறார்.



இந்தப்படத்தின் பூஜை நேற்று ஏவிஎம் ஸ்டுடியோவில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக இயக்குநர் பேரரசு கலந்து கொண்டு படக்குழுவினரை கவுரவித்து வாழ்த்தினார். மேலும் இந்த நிகழ்வில் இயக்குநரும் நடிகருமான ஆர். அரவிந்தராஜ்,, நடிகர் சக்தி குமார், லொள்ளு சபா மாறன், இயக்குநர் பாரதி கணேஷ், நடிகர் ரோபோ கணேஷ், விநியோகஸ்தர் ஆக்சன் ரியாக்சன் ஜெனிஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இந்த நிகழ்வில் இயக்குநர் பேரரசு பேசும்போது, "இந்த படத்தின் தயாரிப்பாளர் வினோத் வி சர்மா என்னிடம் சொல்லும்போது இயக்குநர் ராமச்சந்திரனின் தன்னம்பிக்கை மற்றும் கதையை நம்பித்தான் இந்த படத்தை ஆரம்பித்துள்ளேன் என்று சொன்னார். இப்போதுள்ள சூழ்நிலையில் நல்ல கதை இருந்தாலே மக்கள் வரவேற்பு கொடுத்து விடுவார்கள். இன்றைக்கு ஒப்பனிங் என்பது ஒரு நான்கைந்து ஹீரோக்களுக்கு மட்டும் தான் இருக்கிறது. மற்றபடி என்ன தான் பெரிய பட்ஜெட்டில் படம் எடுத்தாலும் வேறு பெரிய ஹீரோக்கள் நடித்தாலும் மக்களுக்கு பிடித்திருந்தால் தான் அந்த படம் வெற்றி அடைகிறது. அன்று ஒரு படம் பரவாயில்லை என்று சொல்லப்பட்டாலே அது கிட்டத்தட்ட வெற்றி படம் போல தான். ஓரளவுக்கு வசூலித்தும் விடும். ஆனால் இப்போது நிலைமை மாறி உள்ளது. ஒரு முதல் படத்தின் இயக்குநராக நாம் மிகப்பெரிய வெற்றியை பெறுகிறோம் என்பதைவிட நம்மை நம்பிய தயாரிப்பாளரின் நம்பிக்கையை காப்பாற்ற வேண்டும். அதை செய்தாலே அவர் மிகப்பெரிய ஆளாகி விடுவார். அந்த வகையில் இயக்குநர் ராமச்சந்திரன் கடின உழைப்பாளி. தயாரிப்பாளரின் நம்பிக்கையை நிச்சயம் காப்பாற்றுவார்.

ஒரு தயாரிப்பாளர், ஒரு உதவி இயக்குநருக்கு கொடுப்பது வாய்ப்பு அல்ல வாழ்க்கை. அதை வாய்ப்பாக நினைக்காமல் வாழ்க்கையாக நினைக்க வேண்டும். இப்போதைய காலகட்டத்தில் ஒரு படத்தை முதல் நாளில் இருந்தே விமர்சனங்கள் ரொம்பவே பாதிக்கின்றனவோ என்கிற பயம் தயாரிப்பாளர்களுக்கு வந்திருக்கிறது. அதனால் தான் அவர்கள் நீதிமன்றத்தை நாடினார்கள். ஆனால் ஒரு படத்திற்கு நல்ல விமர்சனத்தை சொல்லும்போது ஏற்றுக்கொள்ளும் உங்களுக்கு அதே நபர்கள் உங்களுக்கு எதிராக விமர்சனம் சொல்லும்போது ஏன் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்கிற ஒரு கேள்வியை நீதிமன்றம் கேட்டுள்ளது. சரியான கேள்விதான். அதே சமயம் விமர்சனங்கள் நாகரிகமாக, ஆரோக்கியமாக, நேர்மையாக இருக்க வேண்டும். விமர்சனம் அவதூறாக இருந்தால் காவல்துறையில் புகார் அளிக்கலாம் என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது. முன்பெல்லாம் பத்திரிகை, டிவி விமர்சனங்களை பார்த்துவிட்டு மக்கள் படத்திற்கு சென்றார்கள். இப்போது மக்களே விமர்சகர்கள் ஆகிவிட்டார்கள். மக்களுக்கு பயந்து நாம் படம் எடுக்க வேண்டும். நிறைய சிறு தயாரிப்பாளர்கள் இப்படி நிறைய தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு வாய்ப்பு கொடுப்பது என்பது ஒரு மிகப்பெரிய புண்ணியம். அந்த புண்ணியமே உங்களுக்கு வெற்றியாக அமையும்" என்றார்.

தொழில்நுட்ப கலைஞர்கள் விவரம் தயாரிப்பு ; வி வி எஸ் சுப்ரீம் பிலிம்ஸ் / வினோத் வி சர்மா இணை தயாரிப்பு ; இந்தியன் ஜிம்கலி & பி வி ஆர் புருசோத் பாண்டியன் டைரக்சன் ; எம் வி ராமச்சந்திரன் ஒளிப்பதிவு ; டேனியல் ஜே வில்லியம்ஸ் இசை ; பாலசுப்ரமணியம் ஜி படத்தொகுப்பு ; ராம் சுதர்சன் பாடலாசிரியர் ; மதுர கவி -பொத்துவில் அஸ்வின் - கானா சமீலு ரீ கவி மகேஷ் நடனம் பாபா பாஸ்கர் உடையலங்காரம் ; வி. மூர்த்தி ஒப்பனை ; ராஜூ மக்கள் தொடர்பு ; ஏ.ஜான்

# நிதி திரட்டல் திட்டத்தைப் பரிசீலிப்பதற்காக டிசம்பர் 21 அன்று கூடும் வக்ராங்கி லிமிடெட் - ன் இயக்குனர்கள் குழு

சென்னை, 17 டிசம்பர் 2024: விநியோகச் சங்கிலியில் இறுதிநிலை நபர்களுக்கான இந்தியாவின் மிகப்பெரிய செயல்தளங்களுள் ஒன்றான வக்ராங்கி லிமிடெட், 2024 டிசம்பர் 21 அன்று தனது இயக்குனர்கள் குழு கூட்டம் நடைபெறவிருப்பதாக அறிவித்திருக்கிறது. உரிமைப் பங்குகள் வெளியீடு வாரண்ட்டுகள் முன்னுரிமை பங்கு வெளியீடு ஆகியவற்றின் மூலம் நிதி திரட்ட இந்நிறுவனம் உத்தேசித்திருக்கிறது. ஈக்விட்டி பங்குகள் அல்லது வேறுபிற கடன் பத்திரங்கள் வழியாக அல்லது அனுமதிக்கத்தக்க பிற வழிமுறை மற்றும் / அல்லது பிற கலவை வழிமுறையாக இப்பங்கு வெளியீடுகள் இருக்கலாம் மற்றும் தகுதி வாய்ந்த நிறுவனங்களுக்கான ஒதுக்கீடும் இதில் உள்ளடங்கலாம். இந்த நிதி திரட்டலுக்கான முடிவானது, நிறுவனத்தின் பங்குதாரர்கள் ஒப்புதல் உட்பட, தேவைப்படுகின்ற அனைத்து ஒழுங்குமுறை சட்டரீதியான ஒப்புதல்கள் மற்றும் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும். இந்தியா முழுவதிலும் வங்கிச் சேவைகளை வழங்குவதற்கு கார்ப்பரேட் பிசினஸ் முகவராக (சி பி சி) சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா உடன் ஒரு ஒப்பந்தத்தை தான் செய்து கொண்டதாக சமீபத்தில் இந்நிறுவனம் அறிவித்திருந்தது. 14,000 - க்கும் கூடுதலான வங்கிச்சேவை முகவர் முனைகளுடன் இந்நாட்டின் நிதிசார் உள்ளடக்க குறிக்கோளுக்காக இயங்கி வரும் முன்னணி நிறுவனங்களுள் ஒன்றாக வக்ராங்கி உருவெடுத்திருக்கிறது. கிராமப்புற இந்தியாவில் 6000+ ஏடிஎம்களுடன், 4வது மிகப்பெரிய ஏடிஎம் ஆபரேட்டர் என்ற பெருமையையும் இது கொண்டிருக்கிறது. சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியாவுடனான இக்கூட்டாண்மை, வங்ராங்கியின் வலையமைப்பு மேலும் விரிவாக்கப்படுவதை துரிதப்படுத்தும். நாட்டின் கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறம் ஆகிய இரு பிரிவுகளிலும் இதன் செயலிருப்பை மேலும் வலுப்படுத்தும். வங்கிச்சேவை மற்றும் நிதி சேவைகள் இதுவரை கிடைக்கப்பெறாத மற்றும் குறைவாக கிடைக்கப்பெறும் பிராந்தியங்களில் இவைகளுக்கான அணுகுவசதியை இவை கணிசமாக அதிகமாக்கி நாடெங்கிலும் நிதிசார் உள்ளடக்க நடவடிக்கையை தீவிரமாக முன்னெடுத்துச் செல்லும். இக்கூட்டாண்மையின் கீழ், இந்தியாவெங்கிலும் வங்கிச்சேவையை வக்ராங்கியால் இப்போது வழங்க முடியும். சேமிப்பு மற்றும் நடப்பு கடன் கணக்குகளை (ஈ-கே ஒய் சி வழியாக) தொடங்குவது, குறித்த காலஅளவு / தொடர் வைப்புத்தொகை மற்றும் குறித்த காலவரையறை டெபாசிட் கணக்கு ஆகியவை தொடங்குவது போன்ற முக்கியமான வங்கி சேவைகளை வக்ராங்கி தற்போது வழங்கும். வங்ராங்கி லிமிடெட் - ன் நிர்வாக இயக்குனர் திரு. வேதாந்த் நந்த்வானா இக்கூட்டாண்மை குறித்து கூறியதாவது: அகில இந்திய அடிப்படையில் எமது வக்ராங்கி அமைவிடங்கள் அனைத்திலும் வங்கி சேவைகளுக்கான கார்ப்பரேட் பிசினஸ் கரஸ்பான்டன்ட்டாக நாங்கள் செயல்படுவதற்கு எங்களை ஏதுவாக்குகிறவாறு சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியாவுடன் செய்யப்பட்டுள்ள இக்கூட்டாண்மை ஒப்பந்தத்தை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியும், கௌரவமும் கொள்கிறோம். 2030-ம் ஆண்டுக்குள் எமது இயக்க ரீதியிலான வக்ராந்தி கேந்திரங்களை 3,00,000 என உயர்த்துவதற்கான எமது விஷன் 2030 வளர்ச்சி திட்டத்தைப் பொறுத்தவரை நாங்கள் சரியான திசையில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். எமது வக்ராங்கி அமைவிடங்களில் வங்சிச் சேவைகளை வழங்கி மக்கள் நிதிசார் சேவைகளைப் பெறுமாறு எங்களால் இணைக்க முடியும் என்பதால், எமது வளர்ச்சி மாதிரிக்கு தரமுயர்த்தல் மற்றும் விரிவாக்கத்தை இந்த கூட்டாண்மை ஒப்பந்தம் மேலும் உறுதி செய்கிறது."

# பெண்களுக்கு அநீதி இழைப்பவர்களை 'தொட்டுத் தொடரும் கர்மா' ; இயக்குநர் எம்எஸ்எஸ்-ஸின் புதிய படம்

சென்னை, 17 டிசம்பர் 2024: உதயா கிரியேஷன்ஸ் சார்பில் மனோ உதயகுமார் தயாரிப்பில் உருவாகும் படம் 'தொட்டுத் தொடரும் கர்மா'. 'நீங்காத எண்ணம்', 'மேல்நாட்டு மருமகன்' ஆகிய படங்களை இயக்கிய இயக்குநர் எம்எஸ்எஸ் (எம் எஸ் எஸ்) இந்த படத்தை இயக்குகிறார். முற்றிலும் புதுமுகங்கள் நாயகன் நாயகியாக நடிக்கும் இந்த படத்தில் பிரபலமான பல குணச்சித்திர நடிகர் நடிகைகள் நடிக்க உள்ளனர். கிரைம் திரில்லர் கதையம்சத்தில் இந்த படம் உருவாகிறது. மகாபாரதத்தில் கிருஷ்ண பரமாத்மா "பெண்ணின் மானம் காப்பதே பிரபஞ்ச தர்மம்" என சொல்லி இருக்கிறார். அப்படி பெண்ணின் மானத்திற்கு இழுக்கு ஏற்படுத்தியவர்கள்,



மானத்தை காக்கத் தவறியவர்கள், வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தவர்கள், உதவி செய்ய மனமின்றி நகர்ந்தவர்கள் என யாருமே இந்த பூமியில் வாழ தகுதி இல்லாதவர்கள். அவர்களை நிச்சயம் கர்மா தண்டிக்கும். மகாபாரத போரில் அதுதான் நடந்தது.

சாகும் தருவாயில் கூட துரியோதனன் கிருஷ்ணரிடம், "இந்த மகாபாரத போரையே நீ அதர்மத்தின் வழியில் தான் நடத்துகிறாய் கிருஷ்ணா" என்று கூறுவார். அதற்கு கிருஷ்ணன், "மற்ற வேறு எந்த காரணங்களையும் விட ஒரு மன்னனாக இருந்து உன் சபையிலேயே ஒரு பெண்ணின் மானத்தை காக்க நீ தவறிவிட்டாய். அதன் வழியாகத்தான் இந்த போர் நடந்தது" என்று கூறியிருப்பார். இதனை மையப்படுத்தி தான் இந்த படத்தின் கதை உருவாக்கப்பட்டுள்ளது.

இது பற்றி இயக்குநர் எம்எஸ்எஸ் கூறும்போது, "கலியுகத்தில் அதர்மம் தலை தூக்கும் போதெல்லாம் கடவுள் மனித உருவில் வந்து அவற்றை அழிப்பார் என்று புராணத்தில் கூறப்பட்டுள்ளது. இன்றைய காலகட்டத்தில் பெண்கள் மீதான அத்துமீறல்கள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதுமட்டுமல்ல அதிகார வர்க்கத்தினர், பணவசதி படைத்தவர்கள் செய்யும் அநியாயங்களுக்கு அதர்மத்தின் வழியில் தான் நாம் தண்டனை வழங்க வேண்டி இருக்கிறது. பெண்களுக்கு அநீதி இழைப்பவர்களுக்கு கர்மா பின் தொடர்ந்து வந்து தண்டனை கொடுக்கும் என்கிற கருத்தை வலியுறுத்தி இந்த படம் உருவாகிறது. வரும் ஜனவரி மாதம் தை பிறந்ததும் இதன் படப்பிடிப்பு துவங்க இருக்கிறது, விரைவில் இப்படத்தின் நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்களின் விவரம் அறிவிக்கப்படும்" என்று கூறினார். மக்கள் தொடர்பு ; ஏ.ஜான்

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# 'டிஜிட்டல் கைது' மோசடிகளுக்கு எதிரான விழிப்புணர்வை ஊக்குவிப்பதன் மூலம் என் பி சி எல், குடிமக்களுக்கு அதிகாரம் அளிக்கிறது

சென்னை, 17 டிசம்பர் 2024: இந்தியாவை ஒரு டிஜிட்டல்-முதல் பொருளாதாரத்தை நோக்கி உந்துகின்ற டிஜிட்டல் செலுத்துதல்கள் இப்போது நாடு முழுவதும் அணுகக்கூடியதாக உள்ளது. அவை பாதுகாப்பு மற்றும் வசதி இரண்டையும் வழங்குகின்றன. இருப்பினும், டிஜிட்டல் செலுத்துதல்களைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துவதும் ஆன்லைன் மோசடிகளைத் தவிர்ப்பதும் முக்கியமானதாக இருக்கிறது. சாத்தியமான மோசடிகளை முன்கூட்டியே கண்டறிவது உங்களையும் உங்கள் அன்புக்குரியவர்களையும் பாதுகாக்க உதவுகிறது, அனைவருக்கும் ஒரு பாதுகாப்பான, குறைந்த பணப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கிறது.

டிஜிட்டல் கைது என்றால் என்ன?

ஆன்லைன் மோசடிகள் மிகவும் அதிநவீனமாகி வருகின்றன, 'டிஜிட்டல் கைது' மோசடிகள் ஒரு முக்கிய உதாரணமாக இருக்கின்றன. இந்த மோசடிகளில், மோசடி செய்பவர்கள் தங்களைச் சட்ட அமலாக்க அதிகாரிகளாகக் காட்டி, பாதிக்கப்பட்டவர்களை ஏமாற்றி பணம் அனுப்பச் செய்கிறார்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்களை சம்பந்தப்படுத்தி போலி சட்ட வழக்குகளை உருவாக்கி தனிப்பட்ட தகவல்களைப் பகிரச்செய்கிறார்கள். அவர்கள் தொலைபேசி அழைப்புகள் மூலம் தொடர்பைத் தொடங்கி, வாட்ஸ்அப் அல்லது ஸ்கைப் போன்ற தளங்களைப் பயன்படுத்தி வீடியோ அழைப்புகளுக்கு மாறுகிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் நிதி முறைகேடு அல்லது பிற சட்ட மீறல்களுக்காக ஒரு டிஜிட்டல் கைது வாரண்ட் மூலம் அச்சுறுத்தப்படுகிறார்கள். பயத்தின் கீழ், பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் உடன்படுகிறார்கள், இதன் விளைவாக நிதி இழப்பு மற்றும் அடையாள திருட்டு ஆபத்து ஏற்படுகிறது.

சாத்தியமான 'டிஜிட்டல் கைது' மோசடியை எவ்வாறு கண்டறிவது:

'அதிகாரிகளிடமிருந்து' எதிர்பாராத தொடர்பு: காவல்துறை, சிபிஐ, வருமான வரி அதிகாரிகள் அல்லது சுங்க முகவர்கள் போன்ற அரசு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் என்று யாராவது உங்களைத் தொடர்பு கொண்டால் எச்சரிக்கையாக இருங்கள். குறிப்பாக அவசர சட்ட நடவடிக்கை தொடங்கப்பட்டதாக அல்லது உத்தரவாதம் அளிக்கப்படுவதாக அவர்கள் கூறினால் கவனமாக இருங்கள். நீங்கள் அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர்களில் ஒருவர் பணமோசடி, வரி ஏய்ப்பு அல்லது போதைப்பொருள் கடத்தல் போன்ற கடுமையான குற்றத்தில் ஈடுபட்டுள்ளதாக அவர்கள் குற்றம் சாட்டலாம்.

மிரட்டுகின்ற பேச்சு தொனி மற்றும் அவசரம்: மோசடி செய்பவர்கள் வீடியோ அழைப்புகளைக் கோரலாம், போலீஸ் சீருடையில் மாறுவேடமிட்டுக்கொண்டு, அரசாங்க சின்னங்களைப் பயன்படுத்தி, அல்லது சட்டப்படி முறையானதாக தோற்றமளிக்க அதிகாரப்பூர்வமாக ஒலிக்கும் பின்னணி இரைச்சலை உருவாக்கலாம். அவர்கள் அடிக்கடி கைது அல்லது உடனடி சட்ட நடவடிக்கையை அச்சுறுத்துகிறார்கள், ஒரு விரைவான பதிலைக் கோருகிறார்கள் மற்றும் உறுதியான வாதத்தை உருவாக்க சட்டப்பூர்வ விதிமுறைகளைப் பயன்படுத்துகிறார்கள். சில சந்தர்ப்பங்களில், பாதிக்கப்பட்டவர்களை அவர்களின் சட்டபூர்வமான தன்மையை மேலும் நம்ப வைக்க ஒரு காவல் நிலையம் போன்ற அமைப்பை உருவாக்குகிறார்கள்.

முக்கியமான தகவல் அல்லது பணம் செலுத்துவதற்கான கோரிக்கை: மோசடி செய்பவர்கள் தனிப்பட்ட தகவலைக் கேட்கலாம் அல்லது பெரிய தொகையைக் கோரலாம், இது குற்றம் சாட்டப்பட்ட குற்றத்தில் உங்கள் பங்களிப்பை இல்லாததாக்கும் என்று உறுதியளிக்கின்றார்கள். விசாரணை முடியும் வரை அவர்கள் தங்கள் கணக்கிற்கு பணத்தை மாற்றும்படி வற்புறுத்தலாம். குறிப்பிட்ட வங்கிக் கணக்குகள் அல்லது யூ பி ஐ ஐடிகளுக்குப் பணத்தைப் பரிமாற்றும்படி உங்களை வற்புறுத்துவதற்கு அவர்கள் "உங்கள் பெயரை அழித்தல்", "விசாரணைக்கு உதவுதல்" அல்லது "திரும்பப்பெறக்கூடிய பாதுகாப்பு வைப்பு/எஸ்க்ரோ கணக்கு" போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்தக்கூடும்.

பாதுகாப்பாக இருக்க நடைமுறை செயல்கள்:

இடைநிறுத்தி சரிபார்க்கவும்: சட்டச் சிக்கல்கள் குறித்த எதிர்பாராத அழைப்புகள் அல்லது செய்திகளைப் பெற்றால், சரிபார்க்க சிறிது நேரம் ஒதுக்குங்கள். மோசடி செய்பவர்கள் பயம் மற்றும் அவசரத்தை பயன்படுத்துவதால் அமைதியாக இருங்கள். உண்மையான அரசாங்கமும் சட்ட அமலாக்க அமைப்புகளும் ஒருபோதும் பணம் கேட்க மாட்டார்கள் அல்லது தொலைபேசி அல்லது வீடியோ அழைப்புகள் மூலம் வழக்குகளை விசாரிக்க மாட்டார்கள். எப்பொழுதும் அழைப்பாளரின் அடையாளத்தை உறுதிசெய்து, எந்த நடவடிக்கையும் எடுப்பதற்கு முன் நம்பகமான ஆதாரங்களில் இருந்து ஆலோசனை பெறுங்கள்.

உதவும் சேனல்களைப் பயன்படுத்தவும்: 1930 ஐ தொடர்பு கொள்ளுதல் அல்லது தொலைத்தொடர்புத் துறை (<https://sancharsaathi.gov.in/sfc/> ) மூலம் தேசிய சைபர் கிரைம் ஹெல்ப்லைனுக்கு சந்தேகத்திற்குரிய எண்களைப் புகாரளிக்கவும்.

பதிவுசெய்து புகாரளிக்கவும்: செய்திகளைச் சேமிக்கவும், ஸ்கிரீன்ஷாட்களை எடுக்கவும் மற்றும் ஆவண தொடர்புகளை எடுக்கவும். நீங்கள் ஒரு அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டியிருந்தால் இது அதிகாரிகளுக்கு உதவ முடியும்.

# அண்ணா தி.மு.க. சார்பில் 21-ந் தேதி கிறிஸ்துமஸ் விழா: எடப்பாடி பழனிசாமி ஏற்பாடு


சென்னை, 17 டிசம்பர் 2024: அண்ணா தி.மு.க. சார்பில் வரும் 21 ந் தேதி சென்னையில் கிறிஸ்துமஸ் விழா நடைபெறுகிறது.

அண்ணா தி.மு.க. சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு அரணாக என்றென்றும் விளங்கி வருகிறது. புரட்சித் தலைவி அம்மா கிறிஸ்தவப் பெருமக்களை கௌரவிக்கும் விதமாக, கழகத்தின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்துமஸ் பெருவிழா நிகழ்ச்சியை நடத்தி வந்துள்ளார்.

புரட்சித் தலைவி அம்மாவைத் தொடர்ந்து கழகத்தின் சார்பில், அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமியும் கிறிஸ்துமஸ் பெருவிழா நிகழ்ச்சியை தொடர்ந்து நடத்தி வருகின்றார். அந்த வகையில் இந்த ஆண்டு வருகின்ற 21 ந் தேதி சனிக் கிழமை மாலை 4.30 மணியளவில், சென்னை, கீழ்பாக்கம், சி.எஸ்.ஐ. லைட் ஆடிட்டோரியத்தில் கிறிஸ்துமஸ் பெருவிழா நிகழ்ச்சியை நடத்த உள்ளார்.

இந்நிகழ்ச்சியில், கிறிஸ்தவ பேராயர்கள், ஆயர்கள், போதகர்கள் மற்றும் கிறிஸ்தவப் பெருமக்களும்; தலைமைக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்டோரும் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்கள் என்று அண்ணா தி.மு.க. தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

# பயணப் பகிர்வு தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை ஆதரித்த தமிழக அரசுக்கு பைக் டாக்சி அசோசியேஷன் (பி டி ஏ) நன்றி தெரிவிக்கிறது




சென்னை, 17 டிசம்பர் 2024: நாடு முழுவதும் உள்ள லட்சக்கணக்கான பயணப் பகிர்வு தொழிலாளர்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதில் இடையறாது உறுதுணையாக இருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர், போக்குவரத்துத் துறை அமைச்சர் மற்றும் தமிழக அரசுக்கு பைக் டாக்சி அசோசியேஷன் (பி டி ஏ) அதன் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. இந்த முற்போக்கான நடவடிக்கையானது, அதன் குடிமக்களின் நலன் மற்றும் பயணப் பகிர்வு பொருளாதாரத்திற்கான மாநிலத்தின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகின்ற வகையில் பைக் டாக்சி ஓட்டுநர்களுக்கு ஒரு நிலையான மற்றும் பாதுகாப்பான வருவாய் ஈட்டும் சூழலை உறுதிசெய்கிறது.

தமிழ்நாட்டின் நகர்ப்புற இயக்கத்தை மாற்றியதில் பைக் டாக்சிகள் ஒரு முக்கியப் பங்காற்றியுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில், அதன் பொருளாதார முக்கியத்துவத்தை முக்கியப்படுத்திக் காட்டுகின்ற வகையில் இந்தத் துறையானது, மாநிலத்தின் வருவாயில் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களை பங்களித்துள்ளது. நிதி பங்களிப்புகளுக்கு அப்பால், மில்லியன் கணக்கான பொது மக்களுக்கு மலிவான மற்றும் பயனுள்ள கடைசி எல்லை இணைப்பை வழங்குவதன் மூலம் முக்கியமான போக்குவரத்து சவால்களை எதிர்கொள்வதில் பைக் டாக்சிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. விரைவான, நம்பகமான மற்றும் செலவு குறைந்த போக்குவரத்து தீர்வுகள் அவசியமாக இருக்கின்ற நகர்ப்புற மற்றும் அரை நகர்ப்புற பகுதிகளில் இந்த சேவை குறிப்பாக மதிப்புமிக்கதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

பெண் ஓட்டுனர்கள், இளைஞர்கள், மூத்த குடிமக்கள் மற்றும் பிறர் உள்ளடங்கிய நெகிழ்வான வேலை வாய்ப்புகளைத் தேடும் பலதரப்பட்ட குழுக்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் வருவாய்க்கான ஒரு குறிப்பிடத்தக்க ஆதாரமாகவும் இந்தத் துறை உருவெடுத்துள்ளது. மாற்றியமைக்கக்கூடிய வேலை நேரம் மற்றும் ஒரு உள்ளடக்கிய தளத்தை வழங்குவதன் மூலம், பைக் டாக்சிகள் பல்வேறு பின்னணி கொண்ட தனிநபர்களுக்கு நிதி சுதந்திரத்தை அடைவதற்கும் பொருளாதாரத்திற்கு தீவிரமாக பங்களிப்பதற்கும் அதிகாரம் அளிக்கிறது.

தமிழ்நாட்டின் போக்குவரத்து அமைப்பில் பைக் டாக்சிகள் மற்றும் ஆட்டோ ரிக்ஷாக்களின் ஒத்திசையும் ஒருங்கிணைப்பையும் பி டி ஏ வலியுறுத்துகிறது. பைக் டாக்சிகள் ஆட்டோ ரிக்ஷா செயல்பாடுகளுடன் போட்டியிடுவதற்குப் பதிலாக ஒரு தனித்துவமான மேம்படுத்தும் சேவையை வழங்குகின்ற முக்கியமாக ஒற்றைப் பயணிகளின் பயன்பாட்டு நிகழ்வுகளை வழங்குகின்றன. அந்தந்த பயனர் தளங்கள் மற்றும் செயல்பாட்டு இயக்கவியல் ஆகியவற்றில் குறைந்தபட்ச மேற்பொருந்துதல், இரண்டு போக்குவரத்து முறைகளும் ஒன்றாக செழித்து, கூட்டாக பொதுமக்களுக்கான போக்குவரத்து விருப்பங்களை மேம்படுத்துகிறது.

வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், போக்குவரத்து உள்கட்டமைப்பை மேம்படுத்தவும், மாநிலத்தின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கவும் பைக் டாக்சிகளின் திறனை அங்கீகரிப்பதில் தமிழ்நாடு அரசின் தொலைநோக்கு தலைமைத்துவத்தை இந்த அசோசியேசன் அங்கீகரிக்கிறது. இந்த ஆதரவு லட்சக்கணக்கான பைக் டாக்ஸி ஓட்டுநர்கள் ஒரு கண்ணியமான வாழ்வாதாரத்தை ஈட்டுகின்ற அதேவேளையில் சமூகத்திற்கு தொடர்ந்து சேவை செய்ய முடியும் என்பதை உறுதி செய்கிறது.

ஒரு பொறுப்பான பங்குதாரராக, பி டி ஏ, தமிழ்நாட்டின் ஒரு நிலையான, உள்ளடக்கிய மற்றும் பயனுள்ள போக்குவரத்து கட்டமைப்பை வளர்ப்பதற்கு அரசாங்கம் மற்றும் பிற கூட்டாளர்களுடன் நெருக்கமாக பணியாற்றுவதற்கான தனது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. பயணப் பகிர்வு பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், மாநில மக்களுக்கான நகர்ப்புற போக்குவரத்தின் தரத்தை மேம்படுத்தவும் தொடர்ந்த ஒத்துழைப்பை இந்த அசோசியேஷன் எதிர்நோக்குகிறது.

# திடீர் கோளாறால் சர்வர் முடங்கியது: ஆன்லைனில் மெட்ரோ ரெயில் டிக்கெட் எடுக்க முடியாமல் பயணிகள் தவிப்பு



சென்னை, 17 டிசம்பர் 2024: சென்னை மெட்ரோ ரெயிலில் பயணிக்க ஆன்லைன் டிக்கெட் எடுக்க உதவும் சர்வர் இன்று காலை திடீரென முடங்கியதால் பயணிகள் அவதி அடைந்தனர்.

சென்னையில் 2 வழித்தடங்களில் 54 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரெயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த ரெயில்களில் நாள்தோறும் சுமார் 3 லட்சம் பேர் பயணிக்கின்றனர். தினசரி காலை, மாலை வேளைகளில் மெட்ரோ ரெயில் நிலையங்களில் கூட்டம் அலைமோதுகிறது.

மெட்ரோ ரெயில்களில் பயணிக்க ஆன்லைன் டிக்கெட் எடுக்கும் வசதியில் 20 சதவீதம் தள்ளுபடி வழங்கப்பட்டு வருகிறார். இதனால் பெரும்பாலானவர்கள் ஆன்லைன் டிக்கெட் எடுக்கும் வசதியை விரும்புகிறார்கள்.

இந்த நிலையில் ஆன்லைன் டிக்கெட் எடுக்க உதவிடும் சர்வரில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதால் இன்று காலை 7.40 மணிக்கு திடீரென முடங்கியது. இதனால் பயணிகள் ஆன்லைன் டிக்கெட் எடுக்க முடியாமல் அவதி அடைந்தனர்.

இதையடுத்து மெட்ரோ ரெயில் நிலையங்களில் உள்ள டிக்கெட் கவுன்ட்டரில் சென்று டிக்கெட் எடுக்க பயணிகள் அறிவுறுத்தப்பட்டனர். இதன் காரணமாக, மெட்ரோ ரெயில் நிலையங்களில் உள்ள டிக்கெட் கவுன்ட்டர்களில் வரிசையில் காத்திருந்து டிக்கெட் எடுத்து பயணித்தனர். இதற்கிடையில் சர்வரில் ஏற்பட்ட கோளாறை சரிசெய்யும் பணியில் என்ஜினீயர்கள் ஈடுபட்டனர். ஒரு மணி நேரத்துக்கு மேலாக போராடி, சர்வரில் ஏற்பட்டை கோளாறை காலை 8.52 மணிக்கு சீரமைத்தனர்.

இதைத்தொடர்ந்து, வழக்கம் போல ஆன்லைன் டிக்கெட் பதிவு நடைபெற தொடங்கியது.

தமிழ் குரல் மக்கள்
tamilmakkalkural@gmail.com
RNI No. - TNTAM24840
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## எஸ். ஆர். எம். இயன்முறை மருத்துவக்கல்லூரி, எஸ். ஆர். எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், குழந்தையின் ஆரம்பகால வளர்ச்சியை மேம்படுத்தும் 'க்ளோ' என்ற புத்தகத்தை வெளியிட்டது



சென்னை, 17 டிசம்பர் 2024: எஸ். ஆர். எம். இயன்முறை மருத்துவக்கல்லூரி, எஸ். ஆர். எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், 'க்ளோ' : குழந்தைகளின் நலனுக்கான வழிகாட்டி" என்ற புத்தகத்தை வெளியிட்டது. இதன் ஆசிரியர் எஸ். ஆர். எம். இயன்முறை மருத்துவக்கல்லூரியின் பேராசிரியர் டாக்டர். க. வடிவேலன்.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் நிதியுதவி பெற்ற திட்டத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ள இந்த புத்தகம், 0-12 மாத குழந்தைகளின் வளர்ச்சிக் கட்டங்களை பெற்றோர்கள் கண்காணிக்க உதவும் முக்கிய வளமாக செயல்படுகிறது.

'க்ளோ', வளர்ச்சியைக் கண்காணிக்கும் சிக்கலான செயல்முறையை எளிதாக்கி, ஆதாரத்திற்கான, வழிகாட்டுதலை பெற்றோர்களுக்கு வழங்குகிறது. இந்த புத்தகம், குழந்தைகளின் வளர்ச்சி தாமதங்களை முதற்கட்டத்திலேயே கண்டறிந்து, குழந்தைகளின் எதிர்காலத்தை நேர்மறையாக வடிவமைக்க உதவுகிறது.

இந்த புத்தகத்திற்காக வடிவமைக்கப்பட்ட 'பாரெண்டல் ஐ' என்ற செயலி, பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு நேரடித் தகவல்கள், வளங்கள் மற்றும் வழிகாட்டுதலை வழங்கும் ஒரு செயல்திறன்மிக்க செயலியாக விளங்குகிறது. 'க்ளோ': குழந்தைகளின் நலனுக்கான வழிகாட்டி ஸ்ரீ வெற்றிகரமாக வெளியிடப்பட்டதுடன், 'பாரெண்டல் ஐ' செயலியின் அறிமுகமும் நிகழ்வை சிறப்பித்தது.

"குழந்தையின் ஆரம்ப ஆண்டுகள், அவர்களின் அறிவு, உடல் மற்றும் உணர்ச்சி வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைக்கிறது. 'க்ளோ', பெற்றோர்களுக்கு அவசியமான அறிவினை வழங்கி, அவர்களின் குழந்தையின் நலனுக்கு ஆதரவளிக்க உதவுகிறது," என்று டாக்டர். க. வடிவேலன் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் தலைமை விருந்தினராக நிதி ஆயோக் உறுப்பினர், டாக்டர். விஜய் குமார் சரஸ்வத் கலந்து கொண்டார். பிசியோதெரபி தொடர்பான தனது தனிப்பட்ட அனுபவத்தை பகிர்ந்து கொண்ட அவர், "1982-ஆம் ஆண்டிலிருந்து நான் பிசியோதெரபியின் முக்கியத்துவத்தை கண்டுள்ளேன்," என்று குறிப்பிட்டார்.

எஸ். ஆர். எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் கல்விசார் கூடுதல் நிர்வாகி, டாக்டர். பா. சத்தியநாராயணன் நிகழ்வில் உரையாற்றியபோது, "இந்த புத்தகம் எதிர்காலத்தில் குழந்தைகளுக்கு பயனளிக்கும் ஒரு முக்கிய வளமாக திகழும், மேலும், எங்கள் முன்னாள் மாணவர்கள் நாடு முழுவதும் மற்றும் உலகளவில் விளையாட்டுத் துறை மருத்துவம் மற்றும் பிற துறைகளில் சிறந்து விளங்குகிறார்கள்," என்று பாராட்டினார்.

எஸ். ஆர். எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் துணைவேந்தர், டாக்டர். செ. முத்தமிழ்ச்செல்வன், சிறப்புரையாற்றியபோது, ஆரம்ப குழந்தை வளர்ச்சியின் முக்கியத்துவத்தை மற்றும் குழந்தை வளர்ச்சியை நன்றாக பராமரிக்கத் தேவையான அறிவை பெற்றோர்களுக்கு வழங்குவதின் அவசியத்தை வலியுறுத்தினார். மேலும், புத்தக வெளியீட்டு நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள்:

~ டாக்டர். எஸ். பொன்னுசாமி, பதிவாளர், எஸ்ஆர்எம்ஐஎஸ்டி-காட்டாங்குளத்தூர்

~ டாக்டர். நிதின் எம். நகர்கர், துணைவேந்தர் (எம் எச் எஸ்) பொறுப்பு மற்றும் எஸ். ஆர். எம். மருத்துவ கல்லூரி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் முதல்வர்

~ டாக்டர். ஏ. சுந்தரம், ஆலோசகர், எஸ். ஆர். எம். மருத்துவ மற்றும் சுகாதார அறிவியல்

~ டாக்டர். டி. நாராயண ராவ், நிர்வாக இயக்குனர் ( எஸ். ஆர். எம். கல்வி குழுமம்)

~ டாக்டர். எஸ். சுப்பிரமணியன், நிஷ்டா நிறுவனம், மேலாண்மை இயக்குனர்

~ டாக்டர். டி. எஸ். வீரகௌதமன், முதல்வர், எஸ். ஆர். எம். இயன்முறை மருத்துவக்கல்லூரி

'க்ளோ' புத்தகம் ஆதார அடிப்படையிலான அணுகுமுறை மற்றும் எளிய மொழியை கொண்டுள்ளதால், பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு ஒரு அத்தியாவசிய வழிகாட்டியாக மாறுகிறது, ஒவ்வொரு குழந்தைக்கும் சிறந்த வாழ்க்கையை உறுதிப்படுத்துகிறது.

## நீரிழிவு சிக்கல்களை நிர்வகிப்பதற்கான சிறப்பு மையத்தை (சிஓஈ - எம்டிசி) காவேரி மருத்துவமனை தொடங்கியுள்ளது




சென்னை, 17 டிசம்பர் 2024: மருத்துவ சேவை வழங்குவதில் முன்னணி பல்நோக்கு மருத்துவமனையான காவேரி மருத்துவமனை, இந்தியாவில் நீரிழிவு தொடர்பான சிக்கல்கள் அதிகரித்து வரும் நிலையில் அதன் சுமையை குறைப்பதற்கு இதற்கென அர்ப்பணிக்கப்பட்ட நீரிழிவு சிகிச்சை மையத்தைத் தொடங்கியுள்ளது. இந்த மையத்தை தமிழக அரசின் கூடுதல் தலைமைச் செயலாளரும், தமிழ்நாடு குடிமைப் பொருள் வழங்கல் துறை முதன்மைச் செயலருமான டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார். இந்த அதிநவீன மையத்தில், நரம்பியல், இருதயவியல், சிறுநீரகவியல், ரத்தக்குழாய் அறுவை சிகிச்சை, பாத பராமரிப்பு, உணவுமுறை மற்றும் உடலியக்க நிபுணர்கள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு நிபுணர்களை ஒன்றிணைத்து, நீரிழிவு சிக்கல்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு விரிவான மற்றும் சிறப்பான பராமரிப்பை வழங்க உள்ளது.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின்படி, நீரிழிவு நோய் இந்தியாவில் வளர்ந்து வரும் தொற்றுநோயாக உள்ளது, 10 கோடிக்கும் அதிகமான மக்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த நபர்களில் கணிசமான பகுதியினர் பலவீனமான சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். நீரிழிவு நோயாளிகள் நரம்பியல் நோயை அனுபவிக்கின்றனர். இது நாள்பட்ட வலி, உணர்வின்மை, இருதய நோய், மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படும் அபாயத்தை இரண்டு முதல் நான்கு மடங்கு வரை அதிகரிக்கும். நாள்பட்ட சிறுநீரக நோய் என்பது இந்தியாவில் மற்றொரு பெரிய சிக்கலாகும், நீரிழிவு நோய் ஒரு ஆபத்து காரணியாகும், பெரும்பாலும் இதற்கு டயாலிசிஸ் அல்லது சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை தேவைப்படுகிறது. கூடுதலாக, ரத்தக்குழாய் சிக்கல்கள் மற்றும் ஆறாத மோசமான காயம் ஆகியவை பெரும்பாலும் ஊனங்களை ஏற்படுத்துகின்றன.

இதுகுறித்து காவேரி மருத்துவமனையின் மூத்த நீரிழிவு மருத்துவர் டாக்டர் பரணீதரன் கூறுகையில், "நீரிழிவு நோய் ஒரு உறுப்பை மட்டும் பாதிக்காது, முழு உடலையும் பாதிக்கும். மேலும் அதன் சிக்கல்கள் வாழ்க்கைத் தரத்தை கணிசமாகக் குறைக்கும். காவேரி மருத்துவமனையில், இந்தச் சவால்களை எதிர்கொள்ள வேண்டிய அவசரத் தேவையை நாங்கள் உணர்கிறோம். எங்களின் சிறப்பு மையம், ஆரம்பகாலத்திலேயே தலையிட்டு, சிறப்பான சிகிச்சை மற்றும் நீண்டகால சேதத்தைத் தடுப்பதில் உரிய கவனம் செலுத்தும். மேலும் பலதரப்பட்ட, நிருபிக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையிலான அணுகுமுறையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். தனிநபர்கள் தங்கள் ஆரோக்கியத்தை திறம்பட நிர்வகிப்பதற்கும் முழுமையான வாழ்க்கையை வாழ்வதற்கும் அதிகாரம் அளிப்பதில் எங்களின் அர்ப்பணிப்புக்கு இந்த மையம் ஒரு சான்றாகும்.

சிக்கல்களை முன்கூட்டியே கண்டறிவதற்கான மேம்பட்ட நோயறிதல், தனிப்பட்ட சிகிச்சைத் திட்டங்கள், நீரிழிவு நோயால் கால்களில் ஏற்படும் புண்களுக்கான காயங்களைப் பராமரிப்பது, ஆரோக்கியமான சிறுநீரகத்திற்கான சிறுநீரகவியல் சேவைகள் மற்றும் இதய மற்றும் நரம்பியல் பிரச்சினைகளை நிர்வகிப்பதற்கான இலக்கு சிகிச்சைகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை இந்த மையம் வழங்கும். அனுபவம் வாய்ந்த உணவியல் நிபுணர்கள் மற்றும் பிசியோதெரபிஸ்டுகள் அடங்கிய குழு நோயாளிகளுடன் இணைந்து நிலையான வாழ்க்கை முறை மாற்றங்களை மேம்படுத்தி, ஆரோக்கிய விளைவுகளை உறுதி செய்யும் என்றார்.

காவேரி மருத்துவமனையின் இணை நிறுவனர் மற்றும் செயல் இயக்குநரான டாக்டர் அரவிந்தன் செல்வராஜ் கூறுகையில், "நீரிழிவு தொடர்பான சிக்கல்களில் இந்தியா அதிகரித்து வருகிறது, மேலும் இந்த சவாலை ஒரு முழுமையான மற்றும் நோயாளியை மையமாகக் கொண்ட அணுகுமுறை மூலம் எதிர்கொள்வது மிகவும் முக்கியமானது. நீரிழிவு தொடர்பான சிக்கல்களின் நிகழ்வுகள் மேலும், மருத்துவமனையில உள்ள குழு மூலமாக நாங்கள் வழங்கும் சிகிச்சைகள் சிக்கல்களை திறம்பட நிர்வகிப்பதை அதிகரிக்கும். பல்துறை நிபுணர்களின் அணுகுமுறை மற்றும் நோயாளிகனே முதன்மை என்ற தத்துவத்தை ஒருங்கிணைத்து அளிக்கப்படும் சிகிச்சையால் நீரிழிவு நோயினால் ஏற்படும் சிக்கல்களுக்கு விரைந்து தீர்வு காண்பதை இலக்காக கொண்டுள்ளோம் என்றார்.

## 497 பேர் மீட்பு: ஆயிரக்கணக்கானோர் எச்சரிக்கை: ஊழல் கும்பல்களுக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு



சென்னை, 17 டிசம்பர் 2024: தென்கிழக்கு ஆசியாவில் வேலை வாய்ப்புகளை உறுதியளிக்கும் சைபர் மோசடிகளில் பாதிக்கப்பட்ட ஆறு இந்தியர்கள் மியான்மரில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இந்த சமீபத்திய நடவடிக்கையின் மூலம், ஜூலை 2024 முதல் மியான்மரில் இருந்து மீட்கப்பட்ட மொத்த இந்தியர்களின் எண்ணிக்கை 101 ஐ எட்டியுள்ளது என்று மியான்மரில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

தூதரகம் தனது எச்சரிக்கை ஆலோசனையை மீண்டும் வலியுறுத்தியது: "தூதரகங்களைக் கலந்தாலோசிக்காமல் இப்பகுதியில் வேலை வாய்ப்புகளுக்கு எதிரான எங்கள் ஆலோசனையை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்." வெளியுறவு அமைச்சகம் (எம்.இ.ஏ) மற்றும் மியான்மரில் உள்ள இந்திய தூதரகம் இரண்டும் மியான்மர், கம்போடியா மற்றும் தாய்லாந்தில் போலி வேலைகள் தொடர்பான இணைய மோசடிகள் அதிகரித்து வருவதை எடுத்துக்காட்டுவதாக ஆலோசனைகளை வெளியிட்டுள்ளன.

இந்த மோசடிகள் பொதுவாக வெளிநாடுகளில் உள்ள இந்திய குடிமக்களை இலாபகரமான வேலைவாய்ப்புக்கான வாக்குறுதிகளுடன் கவர்ந்திழுப்பதை உள்ளடக்குகின்றன, இது சைபர் குற்றங்களில் பங்கேற்க அவர்களை கட்டாயப்படுத்துகிறது. சமீபத்தில் மீட்கப்பட்ட 6 பேரில் உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த அஜய் குமாரும் ஒருவர்.

பாதிக்கப்பட்டவர்கள் மியான்மர்-தாய்லாந்து எல்லையில் உள்ள மியவாடி பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டனர், இது மியான்மரின் பாதுகாப்புப் படையினரால் அணுக முடியாத பகுதி, மீட்பு முயற்சிகளை சிக்கலாக்கியது. இந்த சவால்கள் இருந்தபோதிலும், தனிநபர்கள் உள்ளூர் அதிகாரிகளின் உதவியுடன் இந்திய தூதரகத்தை அணுக முடிந்தது.

இதுவரை மொத்தம் 1,600 இந்திய பிரஜைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 497 பேர் மியான்மரைச் சேர்ந்தவர்கள் என்றும் வெளியுறவுத்துறை அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது. வெளிநாடுகளில் உள்ள இந்திய குடிமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான தனது உறுதிப்பாட்டை அமைச்சகம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.







**அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி மாணவர் ஏ. விக்னேஷ். 2024 டிசம்பர் 7ஆம் தேதி முதல் 11, ஆம் தேதி வரை ஒரிசாவின் புவனேஸ்வரில் நடைபெற்ற சிறப்பு மிகு 39வது தேசிய ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப்பில் 4ஜ்400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் கலந்துக் கொண்டு தங்கப் பதக்கம் வென்று தேசிய அளவில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளார். இந்தத் தடகளப் போட்டி நாட்டின் இளம் தடகள வீரரான விக்னேஷின் திறமை அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பை வெளிப்படுத்துவது மட்டுமல்லாமல், விளையாட்டுத் திறன்களை வளர்ப்பதில் கல்லூரி மற்றும் பேராசிரியர்களின் தொடர் ஊக்குவிப்பையும் விளையாட்டு டன் கல்வியிலும் கவனம் செலுத்த முடியும் என்பதையும் பறைசாற்றுகிறது.**